# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2468/10 - 2025 දෙසැම්බර් මස 23 වැනි අඟහරුවාදා - 2025.12.23

*2468/10 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 23 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**கிழக்கு மாகாண மாகாண சபை**

*1990 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, மாகாண சபைகள் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, மாகாண சபைகள் சட்டத்தின் 32(2) ஆம் பிரிவின் கீழான கிழக்கு மாகாண அரசாங்க சேவைக்கான தத்துவங்களை கையளித்தல் தொடர்பான கட்டளை*

கிழக்கு மாகாணத்தின் ஆளுநர் ஜயந்த லால் ரத்னசேகர ஆகிய நான், 1990 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க மாகாண சபைகள் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 32(1) ஆம் உபபிரிவின் கீழ் கிழக்கு மாகாண அரசாங்க சேவையில் ஆட்சேர்ப்பு, நியமனம், இடமாற்றம், பதவியுயர்வு, பதவி நீக்கம் மற்றும் உத்தியோகத்தர்களின் ஒழுக்காற்று கட்டுப்பாடு தொடர்பாக எனக்கு வழங்கப்பட்ட தத்துவங்களை, மாகாண சபைச் சட்டத்தின் 32(2) ஆம் உபபிரிவுக்கு இணங்க 1,2 ஆகிய அட்டவணைகளில் மற்றும் இணைப்பு I, II இல் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக கிழக்கு மாகாண மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவுக்கு 2026 ஆம் ஆண்டு சனவரி 01 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வருமாறு இங்கு கையளிக்கின்றேன்.

ஒழுக்காற்று அதிகாரியின் மற்றும்/அல்லது கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் முடிவுகளில் அதிருப்தியடைபவர்கள் கிழக்கு மாகாண ஆளுநருக்கு மேன்முறையீடு செய்வதற்கு உரிமை உண்டு என்பதனை இத்தால் அறிவிக்கின்றேன்.


1A - PG 7426 — 06 (2025/12)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

கிழக்கு மாகாண அரசாங்க சேவையில் தத்துவங்களைக் கையளிப்பதற்குரிய 2011/08 ஆம் இலக்க 2011 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 08 ஆந் திகதிய ஆளுநர் விஞ்ஞாபனம் மற்றும் அதன் பின்னரான திருத்தங்கள் அனைத்தும், குறித்த கட்டளைகளின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட எந்தவொரு நடவடிக்கைக்கும் பாதிப்பின்றி 2026 ஆம் ஆண்டு சனவரி முதலாம் திகதியிலிருந்து இத்தால் இரத்துச்செய்யப்படுவதாக அறிவிக்கின்றேன்.

கலாநிதி **ஜயந்த லால் ரத்னசேகர**,
ஆளுநர், கிழக்கு மாகாணம்.

கிழக்கு மாகாண ஆளுநர் செயலகம்,
உவர் மலை,
திருகோணமலை.
2025, திசெம்பர் 22.

**<u>ஆளுநர் விஞ்ஞாபனம் - 2026/01</u>**

**கிழக்கு மாகாணப் பொதுச் சேவையுடன் தொடர்புடைய தத்துவங்களை கையளித்தல்**

**அட்டவணை 1**

(1) கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்த லால் ரத்னசேகர ஆகிய நான், 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் பிரிவு 32(1) இனால் எனக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், பிற சட்ட ஏற்பாடுகளுக்கு பாதிப்பில்லாமல், கீழ்வரும் கிழக்கு மாகாணத்தின் பொதுச் சேவை பதவிகள் தொடர்பில் எனக்கு வழங்கப்பட்ட நியமனம்/இடமமர்த்தல் மற்றும் இடமாற்றம் ஆகிய தத்துவங்களை தொடர்புடைய நாடளாவிய சேவைகளின் சேவைப் பிரமாணக் குறிப்புக்களின் ஏற்பாடுகளுக்கு அமைய என்னால் நடைமுறைப்படுத்துவதற்கு எதுவித பாதிப்பும் இல்லாமல், கிழக்கு மாகாணத்தின் மாகாணப் பொதுச் சேவையின் ஆட்சேர்ப்பு, நியமனம், இடமமர்த்தல், பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் பதவி நீக்கம் ஆகிய தத்துவங்களை, மேற்கூறிய அதே சட்டத்தின் பிரிவு 32(2) இன் கீழ் கிழக்கு மாகாண மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுவிற்கு (இதனகத்துப் பின்னர் PPSC-EP என குறிப்பிடப்படும்) இத்தால் கையளிக்கிறேன்.

(i) கிழக்கு மாகாண அமைச்சுகளின் செயலாளர்கள்
(ii) கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளர்
(iii) கிழக்கு மாகாண மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர்
(iv) கிழக்கு மாகாண சபைச் செயலகத்தின் செயலாளர்
(v) கிழக்கு மாகாணத்தின் பிரதம செயலாளர் கொத்தணியின் பிரதிப் பிரதம செயலாளர்கள்
(vi) கிழக்கு மாகாண சபையின் திணைக்களத் தலைவர்கள்
(vii) கிழக்கு மாகாண மாநகர ஆணையாளர்கள்
(viii) கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழுவின் செயலாளர்
(ix) கிழக்கு மாகாண ஆளுநர் செயலகத்தின் உதவிச் செயலாளர்

**அட்டவணை 2**

(2) 1987 ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் பிரிவு 32(1) இன் கீழ் எனக்கு வழங்கப்பட்ட தத்துவங்களின் படியும், 1990 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க மாகாண சபைகள் (திருத்தம்) சட்டத்தின் அத்தியாயம் 4 இனால் திருத்தப்பட்ட பிரிவு 32(2A) ற்கு அமைய உரிய தத்துவங்களை மாகாணத்தின் பிரதம செயலாளர் மற்றும் ஏனைய கிழக்கு மாகாணப் பொதுச் சேவை உத்தியோகத்தர்கள், உரிய சேவைகளின் சேவை பிரமாணக் குறிப்புக்கள் அல்லது ஆட்சேர்ப்புத் திட்டங்கள், கிழக்கு மாகாணத்திற்கு பொருத்தமான தாபன விதிகள், நடைமுறை ஒழுங்கு விதிகள், ஒழுங்கு விதிகள் மற்றும் சுற்றுநிருபங்களின் ஏற்பாடுகளை முறையாகவும் முழுமையாகவும் பின்பற்றி உரிய தத்துவங்களை பிரயோகிப்பதற்கும் பயன்படுத்துவதற்கும் ஏற்ற வகையில் மீளக் கையளிப்பதற்கு பணித்து PPSC-EP-க்கு இத்தால் கையளிக்கின்றேன்.

எவ்வாறெனினும், பின்வரும் தத்துவங்களை தொடர்ந்தும் PPSC-EP தன்னிடமே வைத்துக்கொள்ளும் :

I. மாகாணப் பொதுச் சேவையின் அனைத்து சேவை வகுதிகளுக்குமான ஆட்சேர்ப்பு.

II. இதனோடு இணைக்கப்பட்டுள்ள இணைப்பு I இல் பந்தி 2 இன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள நாடளாவிய சேவைகளுக்குச் சமமான மாகாணப் பதவி நிலை உத்தியோகத்தர்களின் நியமனம்.

III. இதனோடு இணைக்கப்பட்டுள்ள இணைப்பு I இன் பந்தி 4 (ix) இல் வகைப்படுத்தப்பட்டுள்ள மாகாண இணைந்த சேவைகளின் விசேட தரம் மற்றும் அதிசிறப்புத் தர உத்தியோகத்தர்கள் தொடர்பான நியமனம், ஒழுக்காற்று கட்டுப்பாடு மற்றும் பதவி நீக்கம்.

IV. இதனோடு இணைக்கப்பட்டுள்ள இணைப்பு I இல் பந்தி 5(i) இன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள ஆசிரியர்களின் நியமனம்.

V. உரிய ஆட்சேர்ப்புத் திட்டம் அல்லது சேவைப் பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளின் பிரகாரம் PPSC-EP இனை நியமன அதிகாரியாகக் கொண்டுள்ள பதவிகளுக்கான உத்தியோகத்தர்களின் நியமனம்.

VI. ஒப்பந்த அடிப்படையில் அல்லது மீள் நியமன அடிப்படையிலான உத்தியோகத்தர்களின் நியமனம்.

VII. ஆட்சேர்ப்புத் திட்டம் அல்லது சேவைப் பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளின் பிரகாரம் PPSC-EP இனை நியமன அதிகாரியாகக் கொண்டுள்ள பதவிகளுக்கு பதில் கடமை (acting) அல்லது பணிகளை நிறைவேற்றுதல் (Attend-to-the duties) அடிப்படையிலான உத்தியோகத்தர்களின் நியமனம்.

VIII. சேவைப் பிரமாணக் குறிப்பு அல்லது ஆட்சேர்ப்புத் திட்டத்தின் கீழ் குறித்துரைக்கப்பட்ட வகையில் ஏதேனுமொரு பதவிக்கு நியமிக்கப்பட வேண்டிய உத்தியோகத்தர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக, உரிய சேவைப் பிரமாணக் குறிப்பு அல்லது ஆட்சேர்ப்புத் திட்டத்தின்படி தேவைப்படுத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகத்தேர்வுகளை, என்னால் அனுமதியளிக்கப்பட்ட புள்ளியிடல் திட்டத்திற்கு அமைந்த வகையில் நடாத்துதல்.

IX. இணைப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள பந்தி 1 இல் வகைப்படுத்தப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் நீங்கலாக, ஏனைய அனைத்து கிழக்கு மாகாண அரசாங்க சேவை உத்தியோகத்தர்களையும் எனது ஒப்புதலுடன் கிழக்கு மாகாண அரசாங்க சேவையிலிருந்து விடுவித்தல்.

ஒப்பந்த மற்றும் மீள சேவைக்கு அமர்த்தும் அடிப்படையிலான நியமனங்கள் உட்பட மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஆட்சேர்ப்புகள், நியமனங்கள், அனைத்தும் எனது ஒப்புதலுடன் மாத்திரமே நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.

(3) 1987 ஆம் ஆண்டின் 42 ஆவது இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் பிரிவு 32(3) இன் கீழ் எனக்கு வழங்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் என்னால் வேறு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பின் அல்லது வேறு விதமாக நிர்ணயிக்ககப்படும் வரை பின்வரும் ஏற்பாடுகள் நடைமுறையில் இருக்கும் என வெளிப்படுத்துகின்றேன்.

(I) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை (தொகுதி - I, II) மற்றும் அவற்றிற்கு காலத்திற்குக் காலம் மேற்கொள்ளப்படும் திருத்தங்கள் கிழக்கு மாகாண சபையின் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் ஏற்புடையது ஆகும்.

(II) மாகாண தாபன நடைமுறை ஒழுங்கு விதிகள் மற்றும் எனது ஒப்புதலுடன் மாகாணப் பொதுச் சேவை ஆணைக் குழுவால் வெளியிடப்பட்ட அனைத்து சுற்றறிக்கைகள் கிழக்கு மாகாணப் பொதுச் சேவையின் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் ஏற்புடையது ஆகும்.

(III) காலத்திற்குக் காலம் பொதுச் சேவை ஆணைக்குழுவால் திருத்தப்பட்டு வெளியிடப்படும் தாபன நடைமுறை ஒழுங்கு விதிகளானது எனது ஒப்புதலுடன் கிழக்கு மாகாணத்திற்கு ஏற்புடையதாக்கப்படுவதன் அடிப்படையில் கிழக்கு மாகாணப் பொதுச் சேவையின் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் ஏற்புடையது ஆகும்.

(IV) பொதுச் சேவை ஆணைக்குழு, பொது நிர்வாக அமைச்சு, நிதி அமைச்சு மற்றும் ஏனைய நிரல் அமைச்சுக்கள் ஆகியவற்றால் வெளியிடப்படும் உத்தியோகத்தர்களின் ஆட்சேர்ப்பு, நியமனம், இடமாற்றம், பதவியுயர்வு, ஒழுக்காற்று கட்டுப்பாடு மற்றும் பதவி நீக்கம் தொடர்பான சுற்றறிக்கைகள், சம்பந்தப்பட்ட விடயத்திற்குப் பொருத்தமானவாறு கிழக்கு மாகாண பிரதம செயலாளரின் அல்லது PPSC-EP யின் பரிந்துரையுடன் எனது ஒப்புதல் பெறப்பட்டதன் பின்னர் மாத்திரமே கிழக்கு மாகாணப் பொதுச் சேவைக்கு ஏற்புடையது ஆகும்.

(4) (A) கிழக்கு மாகாணத்தின் பிரதம செயலாளருக்கு வழங்கப்பட வேண்டிய தத்துவங்கள் :

I. இணைப்பு I இன் பந்தி 01 இன் கீழ் 1989.11.15 ஆம் திகதி வெளியிடப்பட்ட பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 56/89 மற்றும் அதனுடன் தொடர்புடைய திருத்தங்கள் 1993.04.23 ஆம் திகதிய 56/89(i) இலக்க சுற்றறிக்கை மற்றும் 1995.11.21 ஆம் திகதிய 56/89(ii) ஆம் இலக்க சுற்றறிக்கை ஆகியவற்றின் பிரகாரம் மாகாணப் பொதுச் சேவைக்காக விடுவிக்கப்பட்டுள்ள அல்லது இடைக்கால பணியிடமாற்ற அடிப்படையில் (secondment), இணைக்கப்பட்டுள்ள

நாடளாவிய சேவை அதிகாரிகளின் இடமமர்த்தல், இடமாற்றம் மற்றும் ஆரம்பகட்ட விசாரணைகள் தொடர்பான தத்துவங்கள் பொதுச் சேவை ஆணைக்குழுவின் தாபன நடைமுறை ஒழுங்கு விதிகள் மற்றும் பொதுச் சேவை ஆணைக்குழுவால் அனுமதிக்கப்பட்ட இடமாற்றக் கொள்கை விதிகளுக்கு அமைய செயற்படுத்தப்பட முடியும். ஆயினும், இதனோடு இணைக்கப்பட்டுள்ள இணைப்பு I இன் பந்தி 01 இன் (i), (ii), (vi) மற்றும் (vii ) இல் குறிப்பிடப்பட்டுள்ள நாடளாவிய சேவை அதிகாரிகளின் இடமமர்த்தல் மற்றும் இடமாற்றம் உரிய அமைச்சின் செயலாளர் மற்றும்/அல்லது பிரதிப் பிரதம செயலாளரின் ஆலோசனைக்கு அமைய எனது ஒப்புதலுக்கு இணங்கச் செயற்படுத்தப்படல் வேண்டும்.

II. இதனோடு இணைக்கப்பட்டுள்ள இணைப்பு I இன் பந்தி 01 இன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள, கிழக்கு மாகாண சபையின் கீழ் கடைமையாற்றுகின்ற நாடளாவிய சேவை அதிகாரிகளை விடுவித்தல் தொடர்பான தத்துவங்கள் எனது ஒப்புதலுடன் செயற்படுத்தப்படல் வேண்டும்.

III. இதனோடு இணைக்கப்பட்டுள்ள இணைப்பு I இன் பந்தி 02 இன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள நாடளாவிய சேவைக்குச் சமமான மாகாணப் பதவிநிலை உத்தியோகத்தர்களின் இடமமர்த்தல், இடமாற்றம், ஒழுக்காற்று கட்டுப்பாடு மற்றும் பதவி நீக்கம் தொடர்பான தத்துவங்கள்.

IV. இதனோடு இணைக்கப்பட்டுள்ள இணைப்பு I இன் பந்தி 05(vii ) இல் வகைப்படுத்தப்பட்டுள்ளதும், பிரதம செயலாளரின் அதிகார வரம்பின் கீழ் உள்ளதுமான ஆரம்ப தர ஊழியர்களின் (வரைவிட்ட சேவைகள்) நியமனம், இடமாற்றம், ஒழுக்காற்று கட்டுப்பாடு மற்றும் பதவி நீக்கம் தொடர்பான தத்துவம் காணப்படினும் அவ் ஊழியர்களுக்கான ஆட்சேர்ப்புகள் PPSC-EP இன் அனுமதிக்கு உட்பட்டதாகும்.

V. இதனோடு இணைக்கப்பட்டுள்ள இணைப்பு I இன் பந்தி 05(vii ) இல் வகைப்படுத்தப்பட்டுள்ளதும், பிரதம செயலாளரின் அதிகாரவரம்புக்கு உட்பட்டு உள்ளதுமான ஆரம்ப தர ஊழியர்களை (வரைவிட்ட சேவைகள்) தற்காலிக அல்லது அமய அடிப்படையில் நியமிக்கும் தத்துவம் காணப்படினும் அவ் ஊழியர்களுக்கான நியமனங்கள் வழங்கப்பட முன்னர் எனது முன் ஒப்புதல் பெறப்பட்டிருத்தல் வேண்டும்.

(B) கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் (நிர்வாகம்) அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய தத்துவங்கள் :

I. இதனோடு இணைக்கப்பட்டுள்ள இணைப்பு I இன் பந்தி 3 இன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள மாகாண இணைந்த சேவைக்கு உட்பட்ட உத்தியோகத்தர்களின் (Combined Service Officers) நியமனம், இடமமர்த்தல், இடமாற்றம், பதவியுயர்வு, ஒழுக்காற்று கட்டுப்பாடு மற்றும் பதவி நீக்கம் செய்தல் தொடர்பான தத்துவங்கள் மற்றும் இதனோடு இணைக்கப்பட்டுள்ள இணைப்பு I இன் பந்தி 4(ix) இன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள விசேட தர மற்றும் அதி சிறப்பு தர இணைந்த சேவை அதிகாரிகளின் இடமமர்த்தல் மற்றும் இடமாற்றம் தொடர்பான தத்துவங்கள், பிரதம செயலாளர், உரிய பிரதிப் பிரதம செயலாளர்கள் மற்றும் அமைச்சின் செயலாளர்களின் கலந்தாலோசனையுடன் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.

II. மேலே குறிப்பிட்டுள்ள வகுதிக்குட்பட்ட ஊழியர்களின் அமய அல்லது தற்காலிக அடிப்படையிலான நியமனங்கள் PPSC-EP இன் பரிந்துரையுடன் எனது முன்அனுமதியுடன் மாத்திரமே நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.

III. இதனோடு இணைக்கப்பட்டுள்ள இணைப்பு I இன் பந்தி 05(vii ) இல் வகைப்படுத்தப்பட்டுள்ளதும் பிரதிப் பிரதம செயலாளர் (நிருவாகத்தின்) அதிகார வரம்புக்குட்பட்டதுமான ஆரம்ப தர ஊழியர்களின் (வரைவிட்ட சேவைகள்) அமய மற்றும் தற்காலிக அடிப்படையிலான நியமனங்கள் எனது ஒப்புதலுடன் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

(C) கிழக்கு மாகாணத்தின் பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர், அமைச்சுச் செயலாளர்கள், மாகாண சபைச் செயலக செயலாளர், ஆளுநரின் செயலாளர் மற்றும் அனைத்து பிரதிப் பிரதம செயலாளர்கள் (பிரதிப் பிரதம செயலாளர் - நிர்வாகம் தவிர்ந்த) ஆகியோருக்கு வழங்கப்பட வேண்டிய தத்துவங்கள் :

I. இதனோடு இணைக்கப்பட்டுள்ள இணைப்பு I இன் பந்தி 01 (i), (ii), (vi) மற்றும் (vii ) யில் வகைப்படுத்தப்பட்ட உத்தியோகத்தர்கள் தவிர, தமது அதிகார வரம்புக்குட்பட்ட நாடளாவிய சேவை உத்தியோகத்தர்களை அவர்களது ஆட்சேர்ப்புத் திட்டம், சேவைப் பிரமாணக் குறிப்பு அல்லது இடமாற்றக் கொள்கைகளில் விசேடமாக வேறுவிதமாக குறிப்பிடப்பட்டாலன்றி, அந்த இடமமர்த்தல் மற்றும் இடமாற்றம் செய்யும் தத்துவங்கள்.

II. இதனோடு இணைக்கப்பட்டுள்ள இணைப்பு I இன் பந்தி 04 இல் வகைப்படுத்தப்பட்டுள்ள மாகாண இணைந்த சேவை வகுதிக்கு உட்படாத தமது அதிகார வரம்புக்கு உட்பட்ட பதவி நிலை தர உத்தியோகத்தர்களின் ஆட்சேர்ப்புத் திட்டம், சேவைப் பிரமாணக் குறிப்பு அல்லது இடமாற்றத் திட்டத்தில் விசேடமாக வேறுவிதமாக குறிப்பிடப்பட்டாலன்றி, அவர்களது நியமனம், இடமாற்றம், ஒழுக்காற்று கட்டுப்பாடு மற்றும் பதவி நீக்கம் செய்யும் தத்துவங்கள்.

III. கிழக்கு மாகாண கல்வி விடயத்திற்குரிய அமைச்சின் செயலாளருக்கு, இதனோடு இணைக்கப்பட்டுள்ள இணைப்பு I இன் பந்தி 04(ii) இல் வகைப்படுத்தப்பட்டுள்ள இலங்கை அதிபர் சேவை (Sri Lanka Principal Service) அதிகாரிகளின் இடமமர்த்தல், இடமாற்றம், ஒழுக்காற்று கட்டுப்பாடு மற்றும் பதவி நீக்கம், பந்தி 05(i) இல் குறிப்பிடப்பட்டுள்ள இலங்கை ஆசிரியர் சேவை (Sri Lanka Teachers' Service) அதிகாரிகளின் ஒழுக்காற்று கட்டுப்பாடு மற்றும் பதவி நீக்கம் ஆகியன உரிய ஆட்சேர்ப்புத் திட்டங்கள், சேவைப் பிரமாணக் குறிப்புக்கள் அல்லது இடமாற்றத் திட்டங்கள் என்பனவற்றில் விசேடமாக அல்லது வேறுவிதமாக குறிப்பிடப்பட்டாலன்றி, செயற்படுத்தும் தத்துவங்கள்.

IV. கிழக்கு மாகாண சுகாதார விடயத்திற்குரிய அமைச்சின் செயலாளருக்கு, இதனோடு இணைக்கப்பட்டுள்ள இணைப்பு I இன் பந்தி 05(ii) இல் வகைப்படுத்தப்பட்டுள்ளபடி தங்களது அதிகார வரம்புக்குள் வருகின்ற பதவிநிலை தரம் சாராத உத்தியோகத்தர்களின் (Non-Staff Grade Officers) ஆட்சேர்ப்புத் திட்டம், சேவைப் பிரமாணக் குறிப்பு அல்லது இடமாற்றத் திட்டத்தில் விசேடமாக அல்லது வேறுவிதமாக குறிப்பிடப்பட்டாலன்றி, அவர்களது ஒழுக்காற்று கட்டுப்பாடு மற்றும் பதவி நீக்கம் செய்யும் தத்துவங்கள்.

V. மேலே 4 C (III) மற்றும் 4 C (IV) இல் குறிப்பிட்டுள்ள பிரிவுகள் தவிர, தங்களது நிர்வாக வரம்புக்குள் இதனோடு இணைக்கப்பட்டுள்ள இணைப்பு I இன் பந்தி 05 இல் வகைப்படுத்தப்பட்டுள்ள மாகாண பதவிநிலை தரம் சாராத உத்தியோகத்தர்களின் (Non-Staff Grade Officers) ஆட்சேர்ப்புத் திட்டம், சேவைப் பிரமாணக் குறிப்பு அல்லது இடமாற்றத் திட்டத்தில் விசேடமாக அல்லது வேறுவிதமாக குறிப்பிடப்பட்டாலன்றி அவர்களுக்கான நியமனம், இடமமர்த்தல், ஒழுக்காற்று கட்டுப்பாடு மற்றும் பதவி நீக்கம் செய்யும் தத்துவங்கள்.

VI. அமைச்சு செயலாளர்கள் மற்றும் பிரதிப் பிரதம செயலாளர்களின் அதிகார வரம்புக்குட்பட்ட இதனோடு இணைக்கப்பட்டுள்ள இணைப்பு I இன் பந்தி 05(vii ) இல் வகைப்படுத்தப்பட்டுள்ள ஆரம்ப தர ஊழியர்களின் (வரைவிட்ட சேவை) நியமனம், இடமாற்றம், ஒழுக்காற்று கட்டுப்பாடு மற்றும் பதவி நீக்கம் ஆகிய தத்துவங்கள். எவ்வாறெனினும் PPSC-EP இன் ஒப்புதல் பெறப்பட்டதன் பின்னரே குறித்த சேவை வகைக்கான நியமனங்கள் மேற்கொள்ள முடியும்.

VII. மருத்துவம் அல்லது கருணை அடிப்படையிலான காரணங்கள் நிமித்தம் மாகாணத்திற்குள் வரும் அல்லது மாகாணத்தை விட்டு வெளிச் செல்லும் உத்தியோகத்தர்களுக்கு தற்காலிக இடமாற்றம் வழங்கும் அதிகாரம், PPSC-EP இன் பரிந்துரையுடன் எனது ஒப்புதல் பெறப்பட்டு மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

**குறிப்பு**: மாகாணப் பொதுச் சேவை அலுவலர்களின் ஒழுக்காற்று கட்டுப்பாடு தொடர்பான அனைத்து விடயங்களும் அவ்வப்போது காலம் PPSC-EP மற்றும் தொடர்புடைய நியமன அதிகாரிகளுக்கு அல்லது ஒழுக்காற்று அதிகாரிக்கு முறையாக அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(D) மாகாண திணைக்களத் தலைவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய தத்துவங்கள் :

I. இதனோடு இணைக்கப்பட்டுள்ள இணைப்பு I இன் பந்தி 5(iv) மற்றும் 5(vii ) இல் வகைப்படுத்தப்பட்டுள்ள பதவி நிலை தரம் சாராத திணைக்கள சேவை மற்றும் ஆரம்ப தர ஊழியர்களின் (வரைவிட்ட சேவை) இடமாற்ற தத்துவம், மற்றும் அவர்களது அதிகார வரம்புக்குள் வரும் உள்ளூராட்சி மன்றங்களின் ஆரம்ப தர ஊழியர்களின் இடமாற்ற தத்துவங்கள் அவர்களது ஆட்சேர்ப்புத் திட்டம், சேவைப் பிரமாணக் குறிப்பு அல்லது இடமாற்றத் திட்டத்தில் விசேடமாக வேறுவிதமாக குறிப்பிடப்பட்டாலன்றி தங்களது நிர்வாக வரம்புக்குள் மேற்கொள்வதற்கான தத்துவங்கள்.

II. திணைக்களத்தில் பணிபுரியும் எந்த ஊழியருக்கும் பதவி வெறிதாக்கல் அறிவிப்பு வழங்குதல், பணித்தடை செய்தல் மற்றும் தாபன விதிக்கோவையின் II ஆம் தொகுதியில் குறிப்பிடப்பட்ட சிறிய தண்டனைகள் விதித்தல் ஆகிய தத்துவங்கள் செயற்படுத்தும் போது PPSC-EP, மற்றும் குறித்த நியமன அதிகாரி/ஒழுக்காற்று அதிகாரி ஆகியோருக்கு தகவல் வழங்கப்படல் வேண்டும்.

III. இதனோடு இணைக்கப்பட்டுள்ள இணைப்பு I இன் பந்தி 05(i) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆசிரியர்களின் மாகாணத்திற்குள் இடமமர்த்தல் மற்றும் இடமாற்றம் தொடர்பான தத்துவங்கள், கல்வி அமைச்சின் செயலாளரின் ஒப்புதலுடன் மாகாண கல்விப் பணிப்பாளர் அவர்களால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

IV. இதனோடு இணைக்கப்பட்டுள்ள இணைப்பு I இன் பந்தி 05(ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் மாகாணத்திற்குள் இடமமர்த்தல் மற்றும் இடமாற்றம் தொடர்பான தத்துவங்கள் சுகாதார அமைச்சின் செயலாளரின் ஒப்புதலுடன் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அவர்களால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(E) உள்ளூராட்சி நிர்வாகத் தலைவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய தத்துவங்கள் :

அந்தந்த உள்ளூராட்சி வரம்புக்குள் அட்டவணைப்படுத்தப்படாத (Unscheduled) பதவிகளில் உள்ள ஊழியர்களின் ஆட்சேர்ப்பு, நியமனம், இடமாற்றம், ஒழுக்காற்று கட்டுப்பாடு, பணித்தடை செய்தல் மற்றும் பதவி நீக்கம் மற்றும் தமது அதிகார வரம்புக்குட்பட்ட உத்தியோகத்தர்கள் அல்லது ஊழியர்களின் பதவி வெறிதாக்கல் அறிவித்தல் வழங்குதல் போன்ற தத்துவங்கள் நடைமுறைப்படுத்தும் போது, PPSC-EP, தொடர்புடைய அமைச்சின் செயலாளர், பிரதிப் பிரதம செயலாளர் (நிர்வாகம்) மற்றும் உள்ளூராட்சி ஆணையாளர் ஆகியோருக்கு அவ்வப்போது அறிவிக்கப்படல் வேண்டும்.

(F) வலய கல்விப் பணிப்பாளர்கள் உட்பட பிராந்திய நிறுவனத் தலைவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய தத்துவங்கள் :

I.இதனோடு இணைக்கப்பட்டுள்ள இணைப்பு I இன் பந்தி 05(i) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆசிரியர்களை தங்களது கல்வி வலயத்திற்குள் உள்ள பாடசாலைகளுக்கிடையே இடமாற்றம் செய்யும் தத்துவம் மாகாண கல்விப் பணிப்பாளரது ஒப்புதலுடன் சம்பந்தப்பட்ட வலயக் கல்விப் பணிப்பாளர் அவர்களால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

II. தமது அதிகார வரம்புக்குட்பட்ட உத்தியோகத்தர்கள் அல்லது ஊழியர்களின் பதவி வெறிதாக்கல் அறிவித்தல் வழங்குதல் தொடர்பான தத்துவங்களை செயற்படுத்தும் போது PPSC-EP, மற்றும் குறித்த நியமன அதிகாரி/ ஒழுக்காற்று அதிகாரி ஆகியோருக்கு அறிவிக்கப்படல் வேண்டும்.

III. இதனோடு இணைக்கப்பட்டுள்ள இணைப்பு I இன் பந்தி 05(vii ) இல் வகைப்படுத்தப்பட்டுள்ள ஆரம்ப தர ஊழியர்கள் (வரைவிட்ட சேவை) தொடர்பில் தாபன விதிக்கோவையின் II ஆம் தொகுதியில் குறிப்பிடப்பட்ட சிறிய தண்டனைகள் விதித்தல் தொடர்பான தத்துவங்களை செயற்படுத்தும் போது PPSC-EP, மற்றும் குறித்த நியமன அதிகாரி/ஒழுக்காற்று அதிகாரி ஆகியோருக்கு அவ்வப்போது அறிவிக்கப்படல் வேண்டும்.

(5) என்னால் கையளிக்கப்பட்ட தத்துவங்கள் தொடர்பில் காலத்துக்கு காலம் என்னால் வெளியிடப்படும் அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டுதல்களுக்கு அமைவாக அவ்வாறு தத்துவம் கையளிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் இணங்கி ஒழுகுதல் வேண்டும்.

(6) கையளிக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் கிழக்கு மாகாண சபையின் ஏதேனும் உத்தியோகத்தர் சேவையின் தேவை கருதிய அடிப்படையின் கீழ் உத்தியோகத்தர்களை இடமாற்றம் செய்வதற்கு முன்னர் எனது ஒப்புதலை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

(7) மேன்முறையீடுகள்

(I) கையளிக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் கிழக்கு மாகாண பிரதம செயலாளர் அல்லது ஏனைய உத்தியோகத்தர்களால் எடுக்கப்பட்ட ஏதேனும் தீர்மானம் அல்லது கட்டளையினால் கிழக்கு மாகாண அரசாங்க சேவையின் ஏதேனும் உத்தியோகத்தர் ஒருவர் பாதிக்கப்பட்டவராக உணர்வாராயின் குறித்த தீர்மானம் அல்லது உத்தரவிற்கு எதிராக மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவிற்கு மேன்முறையீடு சமர்ப்பிக்க முடியும். அவ்வாறான மேன்முறையீடு கிடைத்ததன் பின்னர் அம் மேன்முறையீட்டை கருத்திற் கொண்டு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவானது கிழக்கு மாகாண பிரதம செயலாளர் அல்லது கிழக்கு மாகாண அரசாங்க சேவையின் ஏனைய உத்தியோகத்தர் ஒருவரால் எடுக்கப்பட்ட குறித்த தீர்மானத்தை அல்லது கட்டளையை 1990 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைச் சட்டத்தின் 32(2B) இன் கீழ் கையளிக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் தேவை ஏற்படுமிடத்து திருத்துதல், மாற்றுதல், மீளப் பெறுதல் அல்லது மீள அமுல்படுத்தல் போன்றவற்றை மேற்கொள்ள முடியும்.

(II) கையளிக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, கிழக்கு மாகாண பிரதம செயலாளர் அல்லது ஏனைய உத்தியோகத்தர்களால் எடுக்கப்பட்ட ஏதேனும் தீர்மானத்தினால் கிழக்கு மாகாண அரசாங்க சேவையின் ஏதேனும் உத்தியோகத்தர் ஒருவர் பாதிக்கப்பட்டவராக உணர்வாராயின் குறித்த தீர்மானத்திற்கு எதிராக எனக்கு மேன்முறையீடு சமர்ப்பிக்க முடியும். அவ்வாறான மேன்முறையீடு கிடைத்ததன் பின்னர் அத்தகைய மேன்முறையீட்டைக் கருத்திற் கொண்டு 1990 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 1987 ஆம் ஆண்டின் 42 ஆம்

இலக்க மாகாண சபைச் சட்டத்தின் 33(8) இன் கீழ் எனக்கு தத்துவமளிக்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் என்னால் கட்டளை விதிக்க முடியும்.

(III) நாடளாவிய சேவைகளின் உத்தியோகத்தர்கள் தொடர்பான மேன்முறையீடுகள் 1989.11.15 ஆம் திகதிய பொது நிருவாகச் சுற்றறிக்கை இல. 56/89 மற்றும் அதன் திருத்தங்களாகிய 1993.04.23 ஆம் திகதிய பொது நிருவாகச் சுற்றறிக்கை இல. 56/89(i) மற்றும் 1995.11.21 ஆம் திகதிய பொது நிருவாகச் சுற்றறிக்கை இல. 56/89(ii) ஆகிய சுற்றறிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட விதிமுறைகளுக்கு அமைவாக கையாளப்படுதல் வேண்டும்.

(8) கிழக்கு மாகாணத்திற்கு வெளியே இடமாற்றக் கட்டளை பெற்ற கிழக்கு மாகாண பொதுச் சேவையின் உத்தியோகத்தர் ஒருவரை விடுவிப்பதாயின், அத்தகைய உத்தியோகத்தரை விடுவிப்பதற்கு பொறுப்பான அதிகாரி அத்தகைய விடுவிப்புக்கு முன்னர் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் ஊடாக என்னிடம் எழுத்து மூலமான முன் அனுமதியினை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

(9) இத்தால் கையளிக்கப்பட்ட தத்துவங்களை கிழக்கு மாகாண சபையின் மாகாண பொதுச்சேவை உத்தியோகத்தர்கள் செயலாற்றுதல் அல்லது செயற்படாதிருத்தல் அல்லது அதிகாரங்களை மீறிய தீர்மானங்கள் அல்லது அதிகார துஷ்பிரயோகம் என்பவற்றின் மூலம் கிழக்கு மாகாண சபைக்கு ஏற்படும் ஏதேனும் இழப்புக்கள், நட்டங்கள் மற்றும் ஏதேனும் நிதிசார் அல்லது வேறு வடிவ இழப்புக்கள் தொடர்பில் குறித்த உத்தியோகத்தர்கள் பொறுப்பாதல் வேண்டும்.

(10) சேவை வகைகள் மற்றும் கிழக்கு மாகாண சபையின் நிறுவனத் தலைவர்களின் வகைப்படுத்தல்களை விபரிக்கும் இணைப்பு I மற்றும் II இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

(11) இவ் விஞ்ஞாபனத்தில் ஏதேனும் தெளிவின்மை காணப்படுமிடத்து அது தொடர்பில் எனது தீர்மானமே இறுதியும் முடிவுமானதாகும்.

(12) இவ் ஆளுநர் விஞ்ஞாபனம் 2026 ஆம் ஆண்டு சனவரி முதலாம் திகதியிலிருந்து செயல்வலுப் பெறுவதுடன் 2011.09.08 ஆம் திகதிய 2011/08 ஆம் இலக்க ஆளுநர் விஞ்ஞாபனம் மற்றும் அதன் பிந்திய திருத்தங்களாகிய 2013.08.29 ஆம் திகதிய 03/2013 ஆம் இலக்க ஆளுநர் விஞ்ஞாபனம், மற்றும் 2014.07.16 ஆம் திகதிய 04/2014 ஆம் இலக்க ஆளுநர் விஞ்ஞாபனம், 2015.04.15 ஆம் திகதிய 01/2015 ஆம் இலக்க ஆளுநர் விஞ்ஞாபனம் மற்றும் ஏனைய தத்துவங்கள் கையளிப்பு தொடர்பாக இதற்கு முன்னர் வெளியிடப்பட்ட நேரொத்ததான ஆளுநர் விஞ்ஞாபனத் திருத்தங்கள் யாவும் 2026 ஆம் ஆண்டு சனவரி முதலாம் திகதியிலிருந்து இரத்துச்செய்யப்படுகின்றன.

(13) இவ் விஞ்ஞாபனத்தின் ஆங்கில, சிங்கள மற்றும் தமிழ் மொழிமூலங்களில் ஏதேனும் முரண்பாடுகள் காணப்படுமிடத்து ஆங்கில மொழிமூலமே மேலோங்கி நிற்கும்.

கலாநிதி **ஜயந்த லால் ரத்னசேகர**,
ஆளுநர், கிழக்கு மாகாணம்.

2025, திசெம்பர் 22.

பின்னிணைப்பு I

**சேவை வகுதிகள்**

01. **நாடளாவிய சேவை**

I. இலங்கை நிர்வாக சேவை
II. இலங்கை பொறியியலாளர் சேவை
III. இலங்கை விஞ்ஞான சேவை
IV. இலங்கை விவசாய சேவை
V. இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவை
VI. இலங்கை திட்டமிடல் சேவை
VII. இலங்கை கணக்காளர் சேவை
VIII. இலங்கை கல்வி நிர்வாக சேவை
IX. இலங்கை கட்டிடக்கலை சேவை

X. இலங்கை கணக்காய்வாளர் சேவை
XI. இலங்கை மருத்துவ உத்தியோகத்தர் சேவை (நிபுணத்துவர்கள் மற்றும் நிபுணத்துவம் அற்ற)
XII. இலங்கை ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர் சேவை
XIII. இலங்கை நில அளவையாளர் சேவை
XIV. இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவை

02. **நாடளாவிய சேவைகளுக்கு சமமான மாகாண பதவி நிலை உத்தியோகத்தர்கள்**

I. மாகாண கணக்காளர்கள்
II. மாகாணத் திட்டமிடல் உத்தியோகத்தர்கள்
III. மாகாண பொறியியலாளர்கள்
IV. மாகாண விவசாய உத்தியோகத்தர்கள்
V. மாகாண கூட்டுறவுத் திணைக்கள உதவி ஆணையாளர்கள்
VI. மாகாண காணி உதவி ஆணையாளர்கள்
VII. மாகாண உள்ளூராட்சி உதவி ஆணையாளர்கள்
VIII. மாகாண உதவி இறைவரி ஆணையாளர்கள்
IX. மாகாண சட்ட உத்தியோகத்தர்கள்
X. மாகாண வரி அளவீட்டாளர்கள்
XI. மாகாண கணிய அளவையாளர்கள்
XII. புள்ளிவிபரவியலாளர்கள்

03. **மாகாண இணைந்த சேவை**

I. மாகாண மொழிபெயர்ப்பாளர் சேவை (பொ.நி. சுற்றறிக்கை இல.06/2006 பந்தி II இன் பிரகாரம் பதவி நிலை தர உத்தியோகத்தர்)
II. மாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை
III. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் சேவை (பொ.நி. சுற்றறிக்கை இல. 06/2006 பந்தி II இன் பிரகாரம் பதவி நிலை தர உத்தியோகத்தர்) மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர் சேவை
IV. இலங்கை தொழில்நுட்பவியலாளர் சேவை (சிவில்/இயந்திரவியல் /படவரைஞர்//கணிய அளவையாளர்)
V. மாகாண பொது முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்
VI. மாகாண சாரதிகள் சேவை
VII. மாகாண அலுவலகப் பணியாளர் சேவை

04. **மாகாணப் பதவி நிலை தர உத்தியோகத்தர்கள் (பொ.நி சுற்றறிக்கை இல.06/2006 பந்தி II இன் பிரகாரம் நாடளாவிய சேவை சாராத உத்தியோகத்தர்)**

I. களநிலை உத்தியோகத்தர்கள் - பதவி நிலை தரம்
II. இலங்கை அதிபர் சேவை உத்தியோகத்தர்கள்
III. விசேட தர தாதியர்கள், துணை நிபுணத்துவர் சேவைகள் மற்றும் துணை மருத்துவ சேவை உத்தியோகத்தர்கள் - விசேட தரம்
IV. பதிவு செய்யப்பட்ட மருத்துவ உத்தியோகத்தர்கள்/உதவி மருத்துவ உத்தியோகத்தர்கள்
V. திட்டமிடல் அமுலாக்கல் உத்தியோகத்தர்கள்
VI. கணினி நிர்வாகி /நிரலாளர் - பதவி நிலை தரம்
VII. வரி அலுவலர்கள்
VIII. இணைந்த சேவைகளில் உள்ள பதவி தவிர்ந்த மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் உத்தியோகத்தர்கள் (தொழில்நுட்பம்) விசேட தரம்
IX. இணைந்த சேவைகளில் உள்ள உத்தியோகத்தரின் விசேட தரம் மற்றும் அதி சிறப்புத் தரம்
X. திணைக்கள சேவை உத்தியோகத்தர்களின் பதவி நிலைத் தரம் (வரைவிட்ட சேவை)

05. **மாகாணப் பதவி நிலை தரம் அல்லாத உத்தியோகத்தர்கள் (பொ.நி. சுற்றறிக்கை இல.06/2006 பந்தி II இன் பிரகாரம் மாகாண இணைந்த சேவைகள் சாராத உத்தியோகத்தர்)**

I. இலங்கை ஆசிரியர் சேவை
II. தாதியர், மருத்துவ சேவையின் துணை நிபுணத்துவர், துணை மருத்துவ சேவை (இச் சேவையின் விசேட தரம் தவிர்ந்த சேவைகள்)

III. இணைந்த சேவைகளில் உள்ள சேவைகள் தவிர்ந்த முகாமைத்துவ உதவியாளர்கள் (தொழில்நுட்பம்)/மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்)
IV. பதவி நிலைத் தரம் சாரா திணைக்கள சேவை (வரைவிட்ட சேவை)
V. மருத்துவ பதிவு உதவியாளர்கள்
Vi. உள்ளூராட்சி உதவியாளர்கள்
Vil. ஆரம்ப நிலை சேவை ஊழியர்கள் (வரைவிட்ட சேவை)

கலாநிதி **ஜயந்த லால் ரத்னசேகர**,
ஆளுநர், கிழக்கு மாகாணம்.

*2025, திசெம்பர் 22.*

பின்னிணைப்பு II

**திணைக்களத் தலைவர்கள்**

| துறை | உரிய அதிகார வரம்பின் கீழ்வரும் நிறுவனம் மற்றும் நிறுவனங்கள் | | நிறுவனத் தலைவர்கள் |
|---|---|---|---|
| 1. கிழக்கு மாகாண ஆளுநரின் கொத்தணி | | | |
| | (1) | ஆளுநர் செயலகம் | செயலாளர் |
| | (2) | மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு | செயலாளர் |
| | (3) | மாகாண சபைச் செயலகம் | செயலாளர் |
| 2. பிரதம செயலாளர் செயலகம் மற்றும் கிழக்கு மாகாண பிரதம செயலாளர் கொத்தணி | | | |
| | (1) | பிரதம செயலாளர் செயலகம் | பிரதம செயலாளர் |
| | (2) | இறைவரித் திணைக்களம் | மாகாண இறைவரி ஆணையாளர் |
| | (3) | மாகாண கணக்காய்வுத் திணைக்களம் | பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் |
| | (4) | பிரதிப் பிரதம செயலாளர் செயலகம் - நிர்வாகம் | பிரதிப் பிரதம செயலாளர் - நிர்வாகம் |
| | (5) | பிரதிப் பிரதம செயலாளர் செயலகம் - நிதி | பிரதிப் பிரதம செயலாளர் - நிதி |
| | (6) | பிரதிப் பிரதம செயலாளர் செயலகம் - திட்டமிடல் | பிரதிப் பிரதம செயலாளர் - திட்டமிடல் |
| | (7) | பிரதிப் பிரதம செயலாளர் செயலகம் - பொறியியல் சேவைகள் | பிரதிப் பிரதம செயலாளர் - பொறியியல் சேவைகள் |
| | (8) | பிரதிப் பிரதம செயலாளர் செயலகம் - ஆளணி மற்றும் பயிற்சி | பிரதிப் பிரதம செயலாளர் - ஆளணி மற்றும் பயிற்சி |
| | (9) | முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிறுவனம் | முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிறுவன பணிப்பாளர் |
| | (10) | சட்டப் பிரிவு | பிரதம சட்ட உத்தியோகத்தர் |
| | (11) | மோட்டார் போக்குவரத்து திணைக்களம் | மாகாண மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் |
| 3.முதலமைச்சு மற்றும் நிதி மற்றும் திட்டமிடல், சட்டமும் ஒழுங்கும், உள்ளூராட்சி மற்றும் பிராந்திய நிர்வாகம், கிராமிய அபிவிருத்தி, கிராமிய கைத்தொழில், சுற்றுலா மற்றும் சுற்றாடல் அமைச்சு, கிழக்கு மாகாணம். | | | |
| | (1) | முதலமைச்சு | செயலாளர் |
| | (2) | உள்ளூராட்சி திணைக்களம் | மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் |
| | (3) | கிராமிய அபிவிருத்தித் திணைக்களம் | மாகாண கிராமிய அபிவிருத்திப் பணிப்பாளர் |
| | (4) | கிராமிய கைத்தொழில் திணைக்களம் | மாகாண கிராமிய கைத்தொழில் பணிப்பாளர் |
| | (5) | சுற்றுலாப் பணியகம் | சுற்றுலா பணியக பொது முகாமையாளர் |
| 4.விவசாயம், காணி மற்றும் காணி நிருவாகம், கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரம், மீன்பிடி, கூட்டுறவு அபிவிருத்தி, உணவு வழங்கலும் விநியோகத்திற்குமான அமைச்சு, கிழக்கு மாகாணம். | | | |

| துறை | உரிய அதிகார வரம்பின் கீழ்வரும் நிறுவனம் மற்றும் நிறுவனங்கள் | | நிறுவனத் தலைவர்கள் |
|---|---|---|---|
| | (1) | விவசாய அமைச்சு | செயலாளர் |
| | (2) | விவசாயத் திணைக்களம் | மாகாண விவசாயப் பணிப்பாளர் |
| | (3) | கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம் | மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரப் பணிப்பாளர் |
| | (4) | கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் | மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் |
| | (5) | காணி மற்றும் காணி அபிவிருத்தித் திணைக்களம் | மாகாண காணி ஆணையாளர் |
| | (6) | கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு | கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு செயலாளர் |
| | (7) | மீன்பிடிப் பிரிவு | மாகாண மீன்பிடிப் பணிப்பாளர் |
| 5.கல்வி, விளையாட்டு, கலாசார அலுவல்கள், முன் பள்ளிக் கல்வி, தகவல் தொழில்நுட்பக் கல்வி, இளைஞர் விவகாரம், புனர்வாழ்வு மற்றும் மீள் குடியேற்றம், திறன் மற்றும் மனிதவள அபிவிருத்தி அமைச்சு, கிழக்கு மாகாணம். | | | |
| | (1) | கல்வி அமைச்சு | செயலாளர் |
| | (2) | கல்வித் திணைக்களம் | மாகாண கல்விப் பணிப்பாளர் |
| | (3) | விளையாட்டுத் திணைக்களம் | மாகாண விளையாட்டுப் பணிப்பாளர் |
| | (4) | கலாசார அலுவல்கள் திணைக்களம் | மாகாண கலாசார அலுவல்கள் பணிப்பாளர் |
| | (5) | முன் பள்ளிக் கல்விப் பணியகம் | முன் பள்ளிக் கல்விப் பணியக பொது முகாமையாளர் |
| 6. வீதி அபிவிருத்தி, நீர்ப்பாசனம், போக்குவரத்து, கட்டடங்கள் மற்றும் நிர்மாணம், வீடமைப்பு, கிராமிய மின்சாரம் மற்றும் நீர்வழங்கல் அமைச்சு, கிழக்கு மாகாணம். | | | |
| | (1) | வீதி அபிவிருத்தி அமைச்சு | செயலாளர் |
| | (2) | வீதி அபிவிருத்தித் திணைக்களம் | மாகாண வீதி அபிவிருத்திப் பணிப்பாளர் |
| | (3) | நீர்ப்பாசனத் திணைக்களம் | மாகாண நீர்ப்பாசனப் பணிப்பாளர் |
| | (4) | கட்டடங்கள் திணைக்களம் | மாகாண கட்டடங்கள் பணிப்பாளர் |
| | (5) | வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை | வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் |
| | (6) | வீடமைப்பு அதிகார சபை | வீடமைப்பு அதிகார சபையின் பொது முகாமையாளர் |
| 7.சுகாதாரம், சுதேச மருத்துவம், நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு, சமூக சேவைகள் மற்றும் மகளிர் விவகார அமைச்சு, கிழக்கு மாகாணம். | | | |
| | (1) | சுகாதார அமைச்சு | செயலாளர் |
| | (2) | சுகாதார சேவைகள் திணைக்களம் | மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் |
| | (3) | சுதேச மருத்துவத் திணைக்களம் | மாகாண சுதேச மருத்துவ ஆணையாளர் |
| | (4) | நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு திணைக்களம் | மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு ஆணையாளர் |
| | (5) | சமூக சேவைகள் திணைக்களம் | மாகாண சமூக சேவைகள் பணிப்பாளர் |

கலாநிதி **ஜயந்த லால் ரத்னசேகர**,
ஆளுநர், கிழக்கு மாகாணம்.

2025, திசெம்பர் 22.

EOG 12 - 0224

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.